# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77 | யாழ்ப்பாணம். | தொலைபேசி: 7233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மாசி 1981 ★ இதழ் - 62



## கவியோகி சுத்தானந்த பாரதியார்

**ஆயிரம் பிறைகண்ட அருந்தமிழ்க் கவி யோகி அவர்களுக்கு எண்பத்துமூன்று ஆண்டுகள் நிரம்பிவிட்டன. இன்றும் உள்ளத்திலும் உடம்பிலும் பாட்டிலும் உவகையிலும் உரையாடலிலும் இளமைத் துடிப்புள்ள யோகியார் இதுவரை ஐந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளையும் எழுதித் தமிழும் சுத்த சன்மார்க்கமும் பரப்பியுள்ளார்.**

என்றுமுள்ள தென்றமிழை எங்குமுள்ள தமிழாக்குவதில் தீவிரமாயுழைத்த தேன்தமிழ் பாவலர்களுள் கவியோகியரும் ஒருவர். சுப்பிரமணிய பாரதியார் கண்ட கனவை நினைவாக்கிய இவருக்குப் புதுவையில் அரவிந்தர், திருவண்ணாமலையில் இரமணர் முதலாய முனிவர்கள் தொடர்பும் நிறையவுண்டு.

துடுக்குத்தனம் நிரம்பிய பள்ளிப் பாலகனையிருந்த பருவத்திலேயே மிடுக்கான தமிழ்ப்பாடல்கள் பாடவந்த இவருக்கு ஆங்கிலம், பிரெஞ்சு, வடமொழி முதலிய பல மொழிகள் ஒன்றன்பின் ஒன்ருக வந்து ஏவல் செய்தன. எந்த மொழியிலுள்ள எந்த நூலையும் சொந்த மொழியாய தமிழில் பொருட்சிதைவுபடாமல் பெயர்த்தெழுதுவதிலும் பாடுவதிலும் இவர் வேககதி கைவந்தவர்.

வேதம் சங்கர ஐயர் என்று பதினெட்டாம் நூற்ருண்டிற் புகழ்பெற்ற விப்ரர் பரம்பரையில் வந்த வேதியர்கள் சிவகங்கையில் குடியேறியிருந்தனர். அழகிரி சாஸ்திரிகள் அரங்கம்மாள் பெற்ற சாம்பமூர்த்தி அக்காலத்தில் பெரியவர். அவரின் மைந்தர் ஜடாதர் என்பாருக்கு



11-5-1897 இல் தோன்றிய வேங்கட சுப்பிரமணியம் பள்ளி மாணவனுயிருந்த காலத்திலேயே மகான் ஒருவர் இவரைக்கண்டு, மாம்பழம் ஒன்று கொடுத்து, ''நீ சுத்தன், ஆனந்தன்'' என்று வாழ்த்தி, சுத்த சக்தி மந்திரத்தை உபதேசித்தார். அன்றுமுதல் இவர் சுத்தானந்தர் ஆயினுர்.

சுத்தானந்தர் பாடசாலை ஆசிரியராய்ப் பணியேற்றுச் சாரணர் இயக்கத்திலும் பயிற்சிபெற்றுத் தலைவரானுர். குருகுலம் நடத்தியும் பத்திரிகைகளுக்கு எழுதியும் தாமே பத்திரிகைகளை நடத்தியும் பணிபுரிந்தபின், அமைதி பெறுவதற்காகத் திருவண்ணுமலை சென்று இரமண மகானிடம் தங்கியிருந்து தியானமாதியன பழகியபின் அரவிந்த தரிசனம் பெற்று அங்கே வாழ்ந்து யோகத்தமர்ந்து சாதனை பழகினுர். பாலும் பழமும் உட்கொண்டு இருட்டறையில்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

வெற்றியிலும் முயற்சியே மேலானது

உ
சிவமயம்






## திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம்

திருவாவடுதுறை - திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

**வையந் தானளந் தானும் அயனுமாய்
மெய்யைக் காணலுற் ருர்க்கழல் ஆயினுன்
ஐயன் ஆவடு தண்டுறை யாவெனக்
கையில் வெள்வளை யுங்கழல் கின்றதே.**

உலகங்களை அளந்தவனுய திருமாலும் பிரமதேவனும் ஆகிய இருவரும் மெய்ப்பொருளாகிய பிரமத்தைத் தேடியபோது அவர்கள் முன் பேரழற் பிழம்பாய் நின்ற பெருமானே! ஐயனே!! திருவாவடுதுறையில் எழுந்தருளிய அண்ணலே என்று வாய்விட்டழைத்து உடல் மெலிந்த இத்தையலின் கையில் உள்ள வெண்ணிறம் பொருந்திய வளையல்கள் கழல்கின்றன. (ஆன்ம நாயகனிடம்) கொண்ட காதலால் ஆன்மாவின் நிலை இது)




## நாணுடைமை

ஒவ்வாத கருமங்களுக்கு இணங்காத இயல்பு
ஊனைக் குறித்த உயிர் எல்லாம் நாண் என்னும்
நன்மை குறித்தது சால்பு.

உயிர்கள்யாவும் உடம்பை நிலைக்களமாக உடையன. சால்பு என்பது நாண் என்னும் நற்குணத்தை நிலைக்களமாக உடையது.

## A SENSE OF SHAME (Modesty)

All life is in the flesh and the grace of perfection is in a sense of shame.

### அன்பு

வாழ்வை இனியதாக்குவது: கஷ்டங்களை நீங்கச் செய்வது, குடும்பத்தை மேன்மைப் படுத்துவது, உலக வாழ்வை நயக்கச் செய்வது, அழகற்றதை அழகாக்குவது, இன்பந்தருவது.

### தொண்டு

வேற்றுமையை அகற்றுவது, மற்றவரை மதிக்கச் செய்வது, உயிர்களை நேசிக்கச் செய்வது, ஒற்றுமையை உண்டாக்குவது. நல்லறிவை வளர்ப்பது. மனிதனை மேலோனுக்குவது.

## பெப்ருவரி மாத நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 2. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| | | | மாத்தளை மாரியம்மன் கொடி |
| 4. | புதன் | — | அமாவாசை விரதம் |
| | | | சுதந்திர தினம் |
| 9. | திங்கள் | — | முன்னேஸ்வரம் கொடி |
| 12. | வியாழன் | — | கார்த்திகை விரதம் |
| 15. | ஞாயிறு | — | ஏகாதசி விரதம் |
| 16. | திங்கள் | — | பிரதோஷ விரதம் |
| 17. | செவ்வாய் | — | நடேசர் அபிஷேகம் |
| | | | முன்னேஸ்வரம் தேர் |
| 18. | புதன் | — | பூரணை விரதம் |
| 19. | வியாழன் | — | மாசிமகம் |
| | | | மாத்தளை தேர் |
| | | | நகுலேஸ்வரர் கொடி |
| 21. | சனி | — | திருவள்ளுவர் தினம் |

## மதுரைத் திருவள்ளுவர் கழகம்

மதுரை மீனுட்சி சுந்தரேசர் ஆலயத்து வடக்கு ஆடி வீதியில் அலுவலகம் அமைத்துத் திருவள்ளுவர் கழகம் நடத்தும் பெரியவர்கள் பணி பெரிது. முப்பத்தொன்பதாம் ஆண்டு நிறைவு விழாக் காணும் கழகத்தார், தமிழ் மகாநாட்டுக்குச் சென்ற மில்க்வைற் செய்தி ஆசிரியரை வரவேற்று மில்க்வைற் தொழிலதிபரின் திருக்குறள் தொண்டினை வெகுவாகப் பாராட்டி நல்லாசி வழங்கினுர்கள். திருவள்ளுவர் கழகம் கண்ட தி. ப. சு. அவர்கள் நினைவு விழாவும், திருவள்ளுவர் விழாவும், தமிழ்வேள் நினைவு விழாவும் ஒரு சேரநடை பெற்றமை, தமிழ் மகாநாட்டிற்குச் சிகரம் வைத்தாற் போலிருந்தது விழாவில் தோலாநாவின் மேலோர்களும், ஆன்ற புலமைச் சான்ருேர்களும், நல்லிசைப் புலமை மெல்லியலாரும் வந்திருந்தனர், தலைமை தாங்கினர் விரிவுரையாற்றி விழாவைச் சிறப்பித்தனர்.

**★ சத்தியத்தையும் சீலத்தையும் சார்ந்தது சமயம் ★**

# தமிழ்வளர்த்த ஐரோப்பியர் சிலர்

திருவாசகம், திருக்குறள் முதலிய தமிழ் நூல்களை மூலமொழியிலேயே சுவைக்க முயன்ற ஐரோப்பியர் பலர் தமிழின் சுவைகண்டு அதனை முழுக்கக் கற்றுத்தம் வாழ்க்கையைத் தமிழ்த் தொண்டுக்கே அர்ப்பணித்தார்கள். அவர்களுள் போப், தெநோபிலி, கால்ட்வெல், பர்த லோமியோ, ரேனியர், பெஸ்கி முதலானவர்களின் தொண்டுகள் பெரியவை, நிலையானவை.


ஐரோப்பியர்களுள் பாதிரிமாராய் வந்தவர்களின் அரிய முயற்சியாலேயே அச்சுப்பொறி தமிழ்நாட்டுக்கு வந்ததோடு செய்தித்தாள்களும் புத்தகங்களும் எல்லோர் கைகளிலும் கிடைத்தன. பீடும் பெருமையும் சீரும் சிறப்பும் பொருந்திய தமிழ்மொழியைத் தமிழர் புறக்கணித்த காலத்தில் ஐரோப்பியரே அதனைப் பேணிக்காத்தனர். தமிழின் பெருமையைத் தமிழருக்குக் கூறி அவர்கள் அறிவுக்கண்களைத் திறந்தனர்.

றெபேட் த நோபிலி என்பார் (1577—1656) தத்துவ போதக சுவாமி என வழங்கியவர். இத்தாலி நாட்டவர். இவர் 1606ம் ஆண்டில் தமிழகம் வந்து மதுரையில் சைவவாழ்வு வாழ்ந்தவர். பொன்னாலும் வெள்ளியாலும் செய்யப்பட்ட பூணூலணிந்தவர். தமிழ், வடமொழி கற்றுப் பாண்டித்தியம்பெற்று மதமாற்றம் செய்தவர். பின்னர் தமது பயறு அவியாமற்போகவே மதுரையைவிட்டு திருச்சி, சேலம் சென்றவர். இவர் சில காலம் ஈழநாட்டிலும் வாழ்ந்ததாகக் கூறுவர். இவர் உரைநடையிற் பல நூல்கள் செய்தார் என்பர். அவற்றுள் தமிழ் போத்துக்கீச அகராதியும் ஒன்று.

கொன்ஸ்ரன்டின் ஜோசெப் பெஸ்கி என்பார் (1680—1742) இத்தாலியிலிருந்து 1700ம் ஆண்டில் தமிழ் நாட்டுக்கு வந்து மதுரையில் தங்கி வீரமாமுனிவர் என வாழ்ந்து தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் பயின்று, தமிழில் அழகாகச் செய்யுளியற்றும் ஆற்றலும் பெற்றார். இவர் சுப்பிரதீபக் கவிராயர் என்னும் புலவரிடம் படித்தவர் என்பர். இவரும் சைவவாழ்வு வாழ்ந்து தமிழ்மாணவர் எனத் தம்மைக் கூறிவந்தவர். இந்துஸ்தான், பாரசீக மொழிகளைக் கற்றுச் சந்தா சாகிபு என்னும் நவாபுடன் உரையாடி மகிழ்வித்துப் பல்லக்கும் பன்னீராயிரம் ரூபா வருடப்படியும் வருமானமுள்ள ஊர்களும் பெற்றவர். நவாபின் திவானாகவும் சிலகாலம் பதவிவகித்த இவர் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தில் எ ஏ, ஒ ஓ என்னும் எழுத்துக்களுக்கு முதன்முதல் வேறுபாடுகாட்டி எழுதினார். எ ஒ எழுத்துக்களுக்கு மேலே குற்றுவைத்தால் குறிலாயும் குற்றுவைக்காவிடின் ஏ ஓ எனப் படிக்கவும் திருத்தினார். இதனால் தொ தோ என்பன வேறுபாடின்றி வந்தமுறை மாறி தெ்ா தொ எனவந்து, முறையே தொ தோ என உச்சரிக்கப்பட்டன. இவர் தொன்னூல் செய்தமை போலவே முதலில் சதுரகராதி என்னும் அகராதியையும் தொகுத்தார். இவரை வீரமா முனிவர் என வழங்குவதற்குப் பதிலாக தைரியநாதசுவாமி எனவும் வழங்கினர்.

இவர் வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், பேதகமறுத்தல் ஞானமுணர்த்தல், திருச்சபைக் கணிதம், வாமன் கதை, பரமார்த்தகுரு கதை, முதலிய வசன நூல்களையும், தேம்பாவணி, திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, சித்தேரியம்மாள் அந்தாதி முதலிய செய்யுள் நூல்களையும் இயற்றினார். இவரை மதித்த புலவர்கள் இவரைத் திருமதுரைத் செந்தமிழ்த் தேசிகர் என வழங்கினர்.

பதலமியூஸீகன் பால்க் ஜேமன் தேசத்தவரான இவர் டேனிய மன்னருதவி பெற்று நண்பர் பிளீச்சௌ என்பாருடன் 1706ம் ஆண்டில் தமிழ்நாடு வந்து தடைகள் துன்பங்களுக்கிடையே தமிழ்படித்துத் தொண்டு புரிந்தார். பழைய முறையில் தரையில் மணலிட்டு அகரவரிசை பழகிப் பனையோலையில் எழுதப்பழகி ஏடுகள் படித்தார். பலநூல்களை ஏட்டுருவத்தில் பெற்று நூல்நிலையம் அமைத்துப்படித்துவந்தார். இவருக்கு முன்வந்த போதகர்கள் போலன்றி இவர் புறட்டஸ்தன் மதப்பிரிவினராயிருந்தார், நோயுற்றபோது ஒருமுறை ஐரோப்பாவுக்குப் போனபோது தமிழை மறவாதிருப்பதற்காகப் பேச்சுத்துணைக்குத் தமிழர் ஒருவரை உடனழைத்துச் சென்றார். அங்கே தமிழ் - இலத்தீன் இலக்கணத்தையும், அகராதியையும் அச்சில் வெளியிட்டார். டென்மார்க்கரசன் இவருக்கு வேண்டிய பொருள் வசதிகளை உபகரித்தான். தமிழ்நாட்டுக்கு மீண்டதும் இவரின் தலையாய உபகரிப்புத் தமிழ்ப் பாடநூல்களை எழுதி அச்சிட்டு விநியோகித்தமையாகும்.



## பஞ்ச தந்திரம்

பிச்சையெடுப்பது சாவுக்குச் சமானம். நரகத்தை விடத் தீயது. மனத்தைப் பறிக்கும் திருட்டு. கண்ணீருக்குப் புகலிடம். மானத்துக்கு மரணம். பிறரின் ஏளனத்துக்கு இருப்பிடம். பயத்தின் களஞ்சியம், சந்தேகத்தின் விளைநிலம். ஆபத்தின் உறைவிடம், உதவிசெய்ய விரும்பாதவன் முன் கையேந்துதலில் மரணம் சிறந்தது. பொய் பேசுவதைவிட வாய்மூடி மௌனியாய் இருப்பது மேல். பிறர்மனையை நயப்பதைவிட வீரியமில்லாமல் வாழ்வது மேல். பிறர்பொருளைத் திருடுவதைவிடப் பிச்சை எடுத்துண்பதுமேல்.

கோழைகள் தர்ப்பணஞ் செய்வதையும், பாவச்செயலால் வந்த பொருளில் சிராத்தஞ் செய்வதையும் பிதிர்கள் ஏற்பதில்லை. அவனவனுக்குரியதை அவனவன் பெறுவதைத் தேவர்களாலும் தடுக்கமுடியாது.

★ தற் பெருமையில்லாதவனிடம் தெய்வீகம் தழைக்கும் ★

முற்றொடர்:-

## மாண்டூக்கிய உபநிடதம்

**தமிழாக்கம் நவாலியூர் சோ. நடராசன்**

விழிப்பு நிலையைத் தனது தொழிற்பாட்டுக்குக் கோசரமாகக் கொண்ட ''வைஸ்வாநரன்'' ''அ'' என்ற அட்சரமான முதல் அமிசமாகும். இது பெறுதல் என்ற பொருளையுடைய ''அப்'' என்ற வினையடியாகவோ, அல்லது முதலாக நிற்பதாலோ அமைந்ததாகும். இதை அறிந்தவன் உண்மையாகத் தன் காமங்களை (விருப்பங்களை) எல்லாம் பெற்று முதலாவதாகிறான்.

**குறிப்பு:** ''அகர முதல எழுத்தெல்லாம்'' என அட்சரங்களுக்கு முதலாக நிற்றல், காமம் = விருப்பங்கள். வைஸ்வாநரன் = விஸ்வத்தை தன் சரீரமாக உடையவன்.

சொப்பன நிலையைத்தன் தொழிற்பாட்டுக்குக் கோசரமாகக் கொண்டது உகாரம் (தைஜஸம்) என்னும் அட்சரமாகும். இது இரண்டாவது அமிசமாகும். இது உத்கர்ஷத்தினாலும், இடை நிலையில் அமையும். இதை அறிந்தவன் உண்மையில் உயர் நிலைக்குத் தன் ஞான சந்ததியை உயர்த்துவான். எல்லாவற்றுக்கும் சமானமானவனாகிறான். இவனுடைய குலத்திலே பிரமத்தை அறியாதவர் பிறப்பதில்லை.

**குறிப்பு:** உத்கர்ஷம் — உயர்ந்து நிற்றல் உயர்த்தல்.


சுழுத்தியைத் தன் தொழிற்பாட்டுக்குக் கோசரமாகக் கொண்ட ''பிரக்ஞை'' மகாரம் என்னும் அட்சரமாகும். இது மூன்றாவது அமிசம். இதன் வினையடி ''மி'' என்பது. அளத்தல் என்ற பொருளையோ அமிழ்ந்துதல் என்ற பொருளையோ தரும். இதை அறிந்தவர் இதையெல்லாம் அளந்து அறிவார். இதில் அமிழ்ந்தியும் விடுவர்.

**குறிப்பு:** சுழுத்தியில் சாக்கிரமம், சொப்பனம் எல்லாம் மறைந்துவிடும். ஈஸ்வரனே தோற்ற ஒடுக்கங்களுக்குக் காரணன், பிரக்ஞை என்பது அறிதல், இங்கே நினைப்போனும், நினைக்கும் பொருளுமென இரண்டு விஷயம் உண்டு. காண்போன், காணப்படும் பொருள் என இரண்டும் இல்லாவிட்டால் எல்லாம் மௌனமான ஒன்றாகவேயிருக்கும்.

நாலாவது எவ்வித அமிசங்களும் இல்லாதது. பேசொணாதது. பிரபஞ்சம் முழுவதும் அடங்குவது. (பிரபஞ்சோபசமம்) சிவமாகவும் (மங்களம்) அத்வைதமாகவும், (இரண்டற்றது) உள்ளது. இவ்வாறு ஓங்காரம் ஆத்மா. இவ்வாறு எவன் அளிகிறானோ தன் ஆத்மாவைக் கொண்டே ஆத்மாவில் பிரவேசிக்கிறான்.

**குறிப்பு:** இது துரியநிலை. ஓம் என்ற பிரணவத்வை உச்சரித்த பின்னர் மகர ஒற்றின் உச்சாரணத்தின் பின்னர் உள்ள பேச்சற்ற மௌன ஞானத்தை இங்கு உருவகிக்கிறார். இது துரியநிலை என்பது

மாண்டூக்கிய உபநிடதம் சிறியது. ஆனால் மிக முக்கியம் வாய்ந்தது. கௌடபாத ஆசாரியரால் வியாக்கியானஞ் செய்யப்பட்டது. வேதாந்தத்துக்கு அடிப்படையானது.



## மகாத்மா காந்தியடிகள் நினைவு

மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் திருநெல்வேலி சைவச் சிறார் இல்லத்தில் நல்ல முறையிற் கொண்டாடப்பெற்றது. பிள்ளைகளில் பெரும் பற்றுக் கொண்ட மில்க்வைற் தொழிலதிபர் *30-1-1981* வெள்ளிக்கிழமை பிற்பகல் பிள்ளைகளுக்குச் சிற்றுண்டி வழங்கியும் தமது வெளியீடுகளை வழங்கியும் மகிழ்வித்து, மெல்லிசை வல்ல வைகுந்த வாசன் (றமேஸ்) அவர்களைக்கொண்டு கொத்தமங்கலம் சுப்பு எழுதிய வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தார். பிள்ளைகள் ஆவலோடு கேட்டு மகிழ்ந்து நன்றி தெரிவித்தார்கள்.

காந்தியடிகளைப் பற்றித் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் இரண்டாம் வகுப்புக்குத் தயாரித்த தமிழ் இரண்டு என்னும் நூலின் முப்பத்திரண்டாம் பாடத்தை இங்கே எங்கள் நாட்டுக் குழந்தைகளின் நன்மை கருதித் தருகிறோம்.

### மகாத்மா காந்தி

மகாத்மா காந்தி நம் பாரத நாட்டின் தந்தை ஆவர். அவர் நம் நாட்டு மக்கள் அனைவரின் அன்புக்கும் வணக்கத்துக்கும் உரியவர்.

மகாத்மா காந்தி *1869* ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2 ஆம் நாள் போர்பந்தர் என்னும் ஊரில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் காபா காந்தி; தாயார் பெயர் புத்லி பாய். காந்திக்கு அவர் பெற்றோர் இட்ட பெயர் மோகனதாஸ் கரம்சந்த். காந்தி, காந்தியின் மீது அவர் பெற்றோர் பாசமாக இருந்தனர். காந்தியும் தம் பெற்றோர் மீது அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். பெற்றோரைத் தெய்வம் என மதித்தார்; பெற்றோர் சொற்படியே நடந்தார். காந்தி ஒழுங்காகப் பள்ளி சென்றார்; வகுப்பில் கவனமாகப் பாடம் கேட்டார்; பள்ளி முடிந்ததும் வீடு திரும்பிப் பெற்றோருக்கு உதவி செய்தார். படிக்கும்போதே காந்திக்குத் திருமணம் நடைபெற்றது. மனைவியின் பெயர் கஸ்தூரிபா. பள்ளிப் படிப்பு முடிந்தபின் காந்தி இங்கிலாந்து சென்றார்; அங்கே சட்டக்கல்வி பயின்றார்; ஊர் திரும்பியபின், வழக்கறிஞர் ஆனார்.

வழக்கறிஞர் என்ற முறையில் காந்தி தென்னாபிரிக்கா போனார்; அங்கே இந்தியர்கள் தாழ்வாக நடத்தப்பட்டதைக் காண்டார்; நிற வேற்றுமை காரணமாக வெள்ளை

(5ஆம் பக்கம் பார்க்க)

★ **உயிர்களை நேசிப்பது இறைவணக்கத்துக்கு நிகர்** ★

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

**கவியோகி........**

சித்தி பெற்றார். இதனால் பன்னீராயிரத்துக்கு அதிகமான செய்யுள்களைக்கொண்ட பாரதசக்தி மகா காவியத்தை உருவாக்கினார்.

உலகஞ் சுற்றித் தமிழ் பரப்பியும் சுத்த சன்மார்க்கம் பேசியும் தொண்டு புரிந்தவர்களுள் தலையாயவர் எனக் கருதத்தக்க பெரியவர், இவர் என உலகம் அதிசயித்கின்றது. நாட்டுப்பற்றும் மதப்பற்றும் மொழிப்பற்றும் மிக்குடைய இவர் உலக நண்பர்.

சுத்தானந்த பாரதியாரவர்களின் அபிமானத்துக்குரிய வர்களுள் மில்க்வைற் தொழிலதிபர் கனகராசா அவர்களும் ஒருவர். கனகநாயனார் என அன்புடன் அழைத்து மதித்துப் பழகும் சுவாமிகள் கனகராயரைக் கண்டால் கையில் உள்ள எந்தப் பொருளையும் அன்பளிப்புச்செய்து விடுவதில் நிறைவு காண்பவர்.

மில்க்வைற் தயாரிப்புகளில் ஒன்றான நீம் சோப் வேம்பின் மூலப்பொருள் கலந்தது. இதனைத் தயாரிக்கும் முறையைக் கூறி ஊக்கப்படுத்திய கவியோகி அவர்களின் நல்லாசி இத் தயாரிப்புக்கும், தொழிலகத்துக்கும், தொழிலதிபருக்கும் நிறையவுண்டு.

சுவாமி அவர்களின் அருள் மொழிகளையும், பாடல்களையும் சிறு சுவடிகளாகத் தொழிலதிபர் கனகராசா அவர்கள் வெளியிட்டுப் பரப்புவதில் மகிழ்ச்சியும் மன நிறைவும் காண்பவர்.

## தமிழ்த் தென்றல்

தமிழே, தமிழே, தமிழர்க் குயிரே!
அமுதே அழகே யன்பே அருளே
சங்கரன் போற்றிய சங்கத் தமிழே
மங்கலம் பொலியும் மாமணி விளக்கே
பாண்டியன் வளர்த்த பச்சிளஞ் செல்வியே!
வேண்டிய வரங்கள் ஈண்டிய திருவே;
பொதிகைத் தென்றலும் பொன்னியும் வைகையும்
எதுகை மோனையோ டேத்திடுந் தமிழே!
செவிக்கினி தாகிய கவிக்கினி குலுங்கும்
புவிக்கினி தாகிய புண்ணியத் தமிழே!
சித்தர் பாடிய சித்திரத் தமிழே
புத்தொளி பரவும் பூரணத் தமிழே
முருகன் மொழிந்த முழுநிறை தமிழே!
அருகர் புத்தர் கிறிஸ்தவர் இஸ்லாம்
மதத்தின ரெல்லாந் துதித்தநற் றமிழே
மதவரை கடந்த பொதுமறைத் தமிழே
பனிவரை யுச்சியிற் படாம் விரி தமிழே
முனிவர்கை தவழ்ந்த மோகனத் தமிழே
இயலிசை நாடக இயற்கைத் தமிழே!
குயிலிசை கைக்குங் குரலிசைத் தமிழே
தன்னிக ரில்லா நன்மொழித் தமிழே
பன்மொழி படைத்த தென்மொழித் தமிழே
தென்பா லப்பன் சின்முத் திரையில்
தன்பொருள் விளங்குந் தத்துவத் தமிழே
அணியார் மொழியே, அருளா ரழகே
மணிமருந் தாகு மந்திரத் தமிழே,
இதயக் கடவுளை யிலக்கிய தமிழே
பொதுநிலை நடனம் புரிபர மேசன்
காதல ருள்ளப் போதலர் தமிழே
மாதவ னன்பர் ஓதிய தமிழே
உலகெலாம் ஓதற் குரியநற் றமிழே
அலகிலா விளையாட் டரனுவந் தாடிய
பண்ணார் தமிழே, விண்ணார் தமிழே!
கண்ணினு மருமைக் கண்மணித் தமிழே
சொல்லச் சொற்சுவை சொட்டுந் தமிழே
எல்லையில் விரிவு நல்குசெந் தமிழே
அருங்கலைச் செல்வம் பொருந்திய தமிழே
திருந்திய நவரச விருந்தளி தமிழே
வெற்றிவேல் பிடித்த வீரத் தமிழே!
கொற்றவர் முடிமணி கொண்டநற் றமிழே
வானுற வோங்கி வாழ்க நின் பெருமை;
மானுடத் தேவர் வழுத்துக நின்னை!
தெள்ளறி வன்புத் தேறலே, யுலகின்
உள்ளறி வன்பின் உயிர்த்துடிப் பாவாய்,
வானும் புவியும் வாழ்த்துக நின்னை!
வானைப் புவியில் வளர்த்த கற்பகமே,
முன்னிசை யுடனே பின்னிசை யிலகி
இன்னு மின்னு மிசைபெற வாழி!

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

**மகாத்மா....**

யர்கள் மற்ற மக்களை இழிவு செய்ததைக் கண்டு மனங் கொதித்தார். இந்திய மக்களுக்குத் தலைமை ஏற்றார்; பல போராட்டங்களை நடத்தி வெற்றி கண்டார்.

அப்போது நம் பாரத நாட்டை ஆங்கிலேயர்கள் ஆண்டுவந்தார்கள். அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற நம் நாட்டுத் தலைவர்கள் போராடினார்கள். இந்த விடுதலைப் போருக்குக் காந்தி தலைமை ஏற்றார். அவர் அல்லும் பகலும் பாடுபட்டார். அதனால் 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 15 ஆம் நாள் நம்நாடு விடுதலை பெற்றது.

மகாத்மா காந்தி ஏழை எளிய மக்களுக்காக மிகவும் பாடுபட்டார். தாமும் ஓர் ஏழையைப் போலவே உடை அணிந்தார். அவர் உண்மையே பேசினார். எந்த உயிருக்கும் துன்பம் செய்யக்கூடாது என்று கூறினார்.

இந்திய மக்களுக்காக மகாத்மா காந்தி தொடர்ந்து உழைத்தார். 1948 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30 ஆம் நாள் அவரை வெறியன் ஒருவன் சுட்டுவிட்டான். அந்தோ, மகாத்மா காந்தி மறைந்தார்.

மகாத்மா மறைவைக் கேட்டு இந்திய மக்கள் அனைவரும் கதறி அழுதார்கள். உலகமே கண்ணீர் விட்டது. உலகம் உள்ள வரை காந்தியின் புகழ் இருக்கும்.

★ **பழிக்குப் பழிவாங்குவது நட்பாக மாட்டாது** ★

## மாதர் பகுதி

### மாங்காய் நொக்கு

தேவையான பொருட்கள்:-

| | | |
|---|---|---|
| மாங்காய் | — | 2 |
| கடுகு | — | 1 தேக்கரண்டி |
| நல்லெண்ணெய் | — | 2 மேசைக்கரண்டி |
| பெருங்காயம் | — | 1 சிறுதுண்டு |
| செத்தல் மிளகாய் | — | 8 |
| அளவான உப்பு | | |

**செய்கை முறை:**

மாங்காய்த் தோலை நீக்கி துருவலாக்கவும். (Scrape) பின் தாச்சியில் எண்ணெயை ஊற்றி கொதித்ததும் பெருங்காயத்தையும் கடுகையும் போடவும். அவை வெடிக்கும் பதம் வரும் பொழுது, மிளகாயையும் உப்பையும் பொடி செய்து மாங்காய்த் துருவலுடன் கலந்து எண்ணெய்குள் போட்டு நன்ருகக் கிளறவும். தண்ணீர் பற்றுக்குறைய இறக்கி ஆறவிட்டு போத்தலில் போடவும். மூன்று நாளைக்குள் பாவிக்க வேண்டும். எந்தச் சாப்பாட்டுடனும் சிறிதளவு சேர்த்து சாப்பிட நல்லது.

திருமதி ந. ஜெகதீசன்

## வலது குறைந்தவர் வருடம்

வலது குறைந்தவர் ஆண்டு என்று 1981ம் ஆண்டினை ஐக்கிய நாடுகள் பிரகடனப் படுத்தவே, உலகநாடுகள் தங்கள் கவனத்தைச் செவிப்புலனற்ற, கட்புலனற்ற, பேச்சுப் புலனற்ற, உறுப்புக்குறைந்த பிள்ளைகள் மக்களிடம் அதிகமாகத் திருப்பப்போகின்றன.

எல்லா உடம்பும் இறைவன் ஆலயம். கருவுக்கும் உருவுக்கும் கல்லினுட் தேரைக்கும் உணவளிக்கும் இறைவனின் சீவகாருண்யக்குணம் மனிதருக்கு உண்டாகுதல் வேண்டும். அதுவே அன்பு, சிவம். தமிழ்ப்பண்பாட்டை பறைசாற்றும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் பாட்டில் சிறியோரை இகழ்தல் இலம் என்பதும் ஒன்று. தர்மசாலை, ஆதுலர்சாலை அமைத்து அறஞ்செய்த தமிழர் அற்ருர்க்கு ஒன்று ஈதலையே பெரிய அறமெனக் கண்டனர்.

சிவதர்மவள்ளல் கனகராசா அவர்கள் தம்முடைய மில்க்வைற் தொழிலகத்தில் உறுப்புக் குறைந்தவர்களுக்கும் வேலைகொடுத்ததை, கைதடியிலுள்ள நபீல்ட் நிறுவனம் வெகுவாகப் போற்றியுள்ளது. தொழிலதிபர் தருமப் பணிகளில் ஒன்று கால்நடக்க முடியாதவர்களுக்கு உபகரணங்களும் மூன்று சில்லு வண்டிகளும் உபகரித்தமையாகும். இவ்வரிய பணியின் தன்மையை வைத்தியசாலைகளும் ருேட்டரி, லயன்ஸ் கழகங்களும் பாராட்டியுள்ளன. எவரேனும் எங்கிருந்தேனும் கமக்கட்டில் ஊன்றி நடக்கும் உபகரணம் தேவையென்ருல் உடனடியாக வழங்க வசதிசெய்துள்ளார். சைக்கிள் உபகரிப்பு நிதிக்குறைவு காரணமாக தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

முற்றொடர்;

## தமிழில் வழங்கும் வடமொழிகள் சில

| | | |
|---|---|---|
| தூஷணம் | — | பழிச்சொல் |
| தூதர் | — | ஒற்றர் |
| தூபம் | — | புகை |
| தூபி | — | முடி |
| தூரம் | — | தொலைவு |
| தூர்த்தர் | — | தீயர் |
| தூலசரீரம் | — | பருவுடல் |
| தூலம் | | பருமை |
| தேகசம்பந்தம் | — | உடற்றொடர்பு |
| தேகம் | — | உடல் |
| தேகவியோகம் | — | சாக்காடு |
| தேகாப்பியாசம் | — | உடற்பயிற்சி |
| தேசசு | — | ஒளி |
| தேசசரித்திரம் | — | நாட்டுவரலாறு |
| தேசம் | — | நாடு |
| தேசாந்தரம் | — | அயல் நாடு |
| தேசிகன் | — | ஆசிரியன், குரு |
| தேயு | — | தீ, அனல் |
| தேவதை | — | கடவுள் |
| தேவ பக்தி | — | கடவுட்பற்று |
| தேவன் | — | இறைவன் |
| தேவஸ்தானம் | — | கோயில் |
| தேவி | — | இறைவி, தலைவி |

## அடுத்துவரும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு

எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந் தமிழணங்கிற்கு முத்திசையும் விழாக்கள் நடைபெற்றுள்ளன. கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும் நடைபெற்ற விழாக்களுள் தெற்கு உயர்ந்தது. மூன்றுமுறை தெற்கில் நடந்த விழாக்கள் முறையே சென்னை, யாழ்ப்பாணம், மதுரையாகிய மூவிடங்களை உயர்த்திவிட்டன. கிழக்கில் மலர்ந்த விழா மலேசியா நகரான கோலாலம்பூரையும், வடக்கில் எழுந்த விழா பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரையும் அலங்கரித்துள்ளன, இனி மேற்குத் திசையில் விழா நடந்தாகவேண்டும்.

கோடிக்கணக்கில் செலவிடக்கூடிய தமிழார்வமுள்ள அமெரிக்கர் தமிழ்ச் சுவையறிந்தவர்கள். யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டையில் அமெரிக்கர் 150 ஆண்டுகளுக்கு முன்னர் செமினரி நிறுவிக் கல்விப் பணிபுரிந்தபோதே தமிழறிந்துகொண்டவர்கள். அவர்களே முன்னின்ருல் முடியாததொன்றில்லை. சந்திரமண்டலத்தைத் தாவியவர்களுக்குத் தமிழை உயர்த்துதல் இலகுவான அலுவல்.

**சொல்லில் உள்ள பிழை உள்ளத்தில் உள்ள பிழை**

# ஐந்தாவது
# உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு
## 1. தமிழும் மதுரையும்

பாரத நாட்டின் பல்வேறு மாநிலங்களுள் தமிழ்நாடு என்னும் சென்னை மாநிலமும் ஒன்று. பண்பாடும் பழமையும் வாய்ந்த தமிழ்நாட்டின் பழம்பதி பாண்டி நாடு. பாண்டிநாட்டின் தலைநகராம் மதுரை. கூடல், கடம்பவனம், திருவாலவாய் முதலிய பெயர்களால் வழங்கும். மதுரையில் திருவாலவாய் என்னும் திருக்கோயில் மீனாட்சி அம்மன் ஆலயம் எனப் பெருஞ் சிறப்புப்பெற்றது:

தமிழ்நாடு என்னும் மாநிலத்திலுள்ள மாவட்டங்களுள் கோயம்புத்தூர் மாவட்டத்துக்கு அடுத்ததாகப் பெரிய மாவட்டம் மதுரை மாவட்டமாகும். மதுரை மாவட்டம் 12600 சதுரகிலோ மீட்டர் பரப்புடையது. தமிழ்நாட்டின் இருதயம்போல அமைந்துள்ள இந்தப் பிரதேசத்தில் என்றும் திருவிழாக்கள் நடைபெறுவதால் இதனை விழாமலி மூதூர் மதுரை என்று மூவேந்தர் காலத்து முதுபெரும் புலவர்கள் புகழ்ந்துள்ளார்கள். கோயில்களும் பண்பாடும் நிரம்பிய மதுரை மூதூர் தமிழ்மொழியின் மையத்தானம். இங்கேதான் மூவேந்தர்கள் போற்றிய முச்சங்கம் வளர்த்த முத்தமிழ் வளர்ந்தது. தென்மொழி எனப் புகழ்பெற்ற செந்தமிழை தென்னவர் என்னும் பாண்டியர் பேணிவளர்த்தலைத் தங்கள் பிறப்புரிமையாகக் கொண்டனர். சங்கம் வளர்த்த மன்னர்களுக்கும் புரவலர்களுக்கும் பக்கபலமாயிருந்த புலவர்கள் தமிழின் அங்கம் பொலிய நூல்கள் பலசெய்து அணிபெற அழகுசெய்தனர்.

தமிழ்ப்பண்பாட்டை வளர்த்த மதுரையைக் கிழக்குத் தேயத்து அதென்ஸ் நகரம் என ஐரோப்பிய வரலாற்று சிரியர் வருணிப்பர். ஒகஸ்ரஸ்சீசர் காலத்தில் மதுரைப் பேரறிஞர்கள் சிலர் உரோமாபுரியில் விருந்தினராய்த் தங்கியிருந்தனர்.

மதுரை என்றாலே அமுதம் போலினிமையானது என்பது பொருள். மதுரையை அலங்கரிக்கும் மீனாட்சியம்மை ஆலயம் கல்லிலே அமைந்த கவி என்பர். தென்னகத் தமைந்த தெப்பக்குளங்களில் மாரியம்மன் தெப்பக்குளம் கல்கொண்டு அமைத்த பெருநீர்த்தேக்கமாகும். பிற்காலத் திருமலைநாயக்கர் அமைத்த அரண்மனை இன்றுவரை உருக்குலையாது நின்றொளிரும் பெருநிலை மாடமாளிகையாகும்.

மதுரையையடுத்த அழகர்கோயில், திருப்பரங்குன்றம், பசுமலை, பழநி முதலிய இடங்கள் பழம்பெருமை வாய்ந்தனவாகும். உலகத்தவரைப் பரவசப்படுத்தும் கொடைக்கானல் மதுரைக்கேயன்றிப் பாரத நாட்டுக்கே பேரணியாயுள்ளது. மலையும் மலையடிவாரமும் முல்லைநிலமும் வானுற வளர்ந்த மரங்களும் நீர்வீழ்ச்சியும் நீர்த்தேக்கமும் ஐரோப்பாக் கண்டத்தின் சுகத்தானமான சுவிற்சலாந்து நாட்டை நினைப்பிப்பதாகும் என்பர்.



# Realisation of God
### Swami Sivananda

Seek God through purity. See Him in your own heart. Discover Him in all beings. Feel His presence everywhere. Seek Him here and now. Temple of the Lord is in you. Contact Him through meditation. He is the soul of the world, Realise Him in all nature. God is the Indweller of all. Perceive His Glory in all. God is beyond imagination. Experience Him through intuition Know God and be free. Realise God and be happy.

★

### Thus Spoke Swami Vivekananda

There is no chance for the welfare of the world unless the condition of women is improved. It is not possible for a bird to rely on only one thing. All truth is eternal. Truth is nobody's property, no race, no individual can lay any exclusive claim to it.

★

### No Time to Hate

Rabia the Muslim woman saint was once asked Do you love God? Oh yes she said. Do you not hate the devil? "My love for God does not give me time to hate the devil" she said.

★

### Sufferings

Sufferings are the touch slones on which man's spiritual worth is tested, and it is also the exercise through which his spiritual strength is built up.

*Swami Tapasyananda*

★

### Hope from the East

We cannot see the moon and the stars so long as we choose to remain with the aura of street lamps and wesky advertisements. We cannot even hope to discover what is happening in the East if we turn our faces and feet towards the west.

*Aldous Huxley*

★

### Three Stories of Heart

A man who does not have temple in his heart cannot have his heart in any temple.

A heart without prayer is better than prayer without heart. A poor man with a rich heart is better than a rich man with a poor heart.

*Wisdom*

# ஐந்தாவது
# உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு
## 2. தமிழுணர்ச்சி

மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டைப் பற்றிப்பலர் பலவிதமாக பேசிக் கொள்கின்றனர். பத்து, பன்னிரண்டு கோடி ரூபாவைச் செலவிட்டுப் பஞ்சம் பட்டினியை போக்கலாந்தானே என்பவர் ஒருசாரார். தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்ச்கள் போதா என்பவர் ஒரு சாரார். பன்னிரண்டு கோடி செலவானது விவசாயிகள் கவலை என்பவர் ஒரு சாரார். உலகத் தமிழர்களின் உரிமைக் குரல் ஒன்று காஞ்சிப் பெரியாரையே கடுமையாகத் தாக்கிற்று ''உலகத் தமிழ் மகாநாட்டிற்கு ஆர்வம் காட்டிய காஞ்சி சங்கராசாரியே! அன்னைத் தமிழுக்கு ஆலயங்களில் அர்ச்சனை உரிமை வேண்டும். தமிழனுக்கு அர்ச்சகர் உரிமை வேண்டும்'' என்று தமிழில் மிகையபிமானக்குரல் ஒலித்தது.

இன்னொரு சாரார் உலகத் தமிழாராய்ச்சி வரலாற்றியல், சமூகவியல், மானிடவியல் ரீதியில் நடைபெறுதல் வேண்டும், எனக் குரல் எழுப்பினர். இன்னொரு சாரார் உலக அறிஞர்களுக்குத் தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு முதலியவற்றை உணர்த்துவது இம் மகாநாடு என்றும், அமெரிக்காவில், சிகாகோ, வாஷிங்ரன், பென்னிசில் வேனியா முதலிய பல்கலைக் கழகங்களிலும்; ஜேர்மனியில் கோலன், ஹைடன்பர்க் முதலிய பல்கலைக்கழகங்களிலும்; பிரித்தானியாவில் லண்டண் படிப்பகத்திலும் தமிழாராய்ச்சி நடைபெறுகின்றது என்றும் பெருமைப்படுவர். தமிழ் இதழ் என்னும் மகுடத்தில் தமிழாராய்வு சம்பந்தமாக 20 இதழ்கள் இதுவரை அச்சாகிவிட்டன. இன்னும் பல நூல்கள் வெளிவரவுள்ளன. ஆய்வு அலுவல்கள் இலக்கியம், மொழியியல், கலையியல், தொல்பொருளாய்வு, பதிப்பு, பயிற்சி ஆகிய துறைகளில் பேராசிரியர்கள் பலர் பணி புரிகின்றனர்.

தமிழை உலகத்தவர் உணர்வதற்காகத் தமிழிலக்கியத் துணைவன் Companion to Tamil Literature என்னும் பெருநூல் ஒன்று ஆங்கிலத்தில் தயாராகின்றது. அது தொகுதிகளாக விரைவில் வெளிவரும் என்பர். தமிழின் மிகப் பழைய நூலான தொல்காப்பியம் சிறந்த பதிப்பாக வெளிவரும் தற்சமயம். ஐம்பதின்மர் கலாநிதிப் பட்டத்திற்காகப் பன்முகமாக ஆராய்ச்சியில் ஈடுபட்டுழைக்கின்றனர். திருக்கோயில்கள், நாட்டுப் பாடல்கள், கலை, கலாசாரம், வில்லுப்பாட்டு, முதலிய துறைகளில் விரிவான ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இன்னும் ஆங்கிலப் புலவர்கள், தமிழ்ப் புலவர்கள் படைப்புக்களை ஒப்புநோக்கி ஆராயும் முயற்சியும் மும்முரமாக நடைபெறுகின்றது.

மதுரையை வளம்படுத்தி அழகு செய்யும் வைகை நதி வற்றி வரண்ட வேளையில் புதுவெள்ளம் போல மக்கள் கூட்டம் எங்கும் பொங்கிப் பொலிந்து கூடியிருந்தது. மதுரையில் எங்கே பார்த்தாலும் பத்துலட்சத்துக்குக் குறையாத மக்கள் கூட்டம்.

விழாவென்று கருதினுல் ஒருநாளில் ஒருவேளையில் ஓரிடத்தில் நடந்தது எனக்கொள்ளலாகாது. மதுரை மாநகரிலே மூலை முடக்கெங்கும் விழாக்கள். ஓரிடத்தில் ஒரு நிகழ்ச்சி என்ருல் வேருரிடத்தில் இன்னொரு நிகழ்ச்சி. காமராஜர் பல்கலைக்கழகம், மீனுட்சிஅம்மன் கோயில்.

வீதியோடு விளையாடாதீர். பாதையில் நேராகச் செல்லுங்கள் என்று காவல்துறையினர் கேட்டுக்கொண்டதோடு பொதுமக்களுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளைத் தாயன்பில் செய்துவைத்தார்கள். போக்குவரத்துத் துறையில் பாண்டியன் சேவையினர் வாழ்த்துகிருேம் வரவேற்கிருேம் என்றுகூறி எவரெவரை எங்கே கொண்டுபோய்விட வேண்டுமோ அங்கெல்லாம் கொண்டு போய்விட்டனர். கப்பல்மூலம் இராமேஸ்வரத்தில் கரைசேர்ந்தவரையும் சிறப்புப் பேருந்தி வண்டி சீக்கிரமாய்க் கொண்டு சென்று விழாக்காண வைத்தமை அற்புதமான ஒழுங்கும் கட்டுப்பாடும் எனலாம்.


மில்க்வைற் நீலசோப் மேலுறைகளின் சாயலில் வேறு சோப்புக்கள் விற்பனைச் சந்தையில் உலாவுவதால் நீலசோப் வாங்கும்பொழுது V. M. K. அடையாளமுள்ள மில்க்வைற் நீலசோப் மேலுறைகளைக் கவனித்து வாங்குங்கள்.

பளிச்சிடும் வெண்மைக்கு பாவியுங்கள்

மில்க்வைற் நீல சோப்




10 மேலுறைகளை அனுப்பி
மில்க்வைற் செய்தி, யோகாசனப் புத்தகம் - விளக்கப்படம்
அப்பியாசப் புத்தகம் அல்லது வெளியீடுகளில் ஒன்று
இவற்றில் ஏதாவதொன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் ''சிவநெறிப்புரவலர்'' க. கனகராசா ஜே. பி. அவர்கள்.
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-1-81.